# 078/2017–T

Maximum : 100 marks

Time : 1 hour and 15 minutes

**1.** கேரள மாநிலம் உருவாகும் போது கர்நாடகத்தின் எந்த மாவட்டத்தில் எந்த தாலுகா கேரளாவின் ஒரு பகுதியாக மாறியது?

(A) தோவாளா (B) அகஸ்தீஸ்வரம்
(C) ஹாஸ்துர்க் (D) விலவன்கோடு

**2.** இந்தியாவின் எந்த செய்தித்தாள் முதன்முதலில் இணையத்தின் மூலம் தனது பதிப்பை வெளியிட்டது?

(A) தி க்ரானிகல் (B) இந்தியன் எக்ஸ்பிரஸ்
(C) தி ஹிந்து (D) ஃபைனான்ஷியல் எக்ஸ்பிரஸ்

**3.** வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள ஒரு தீவுக்கூட்டம் :

(A) லக்ஷசதீபம் (B) அந்தமான் மற்றும் நிக்கோபார்
(C) இந்தோனேசியா (D) ஸ்ரீலங்கா (இலங்கை)

**4.** வீட்டுக் கொடுமைகளிலிருந்து மகளிருக்கான பாதுகாப்புச் சட்டம் எந்த வருடம் கொண்டு வரப்பட்டது?

(A) 2014 (B) 2005
(C) 2006 (D) 2010

**5.** இந்தியாவில் தகவல் உரிமைச் சட்டம் எந்த மாநிலத்திற்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது?

(A) பஞ்சாப் (B) தெலுங்கானா
(C) ஜம்மு & காஷ்மீர் (D) குஜராத்

**6.** வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தின் முதல் நாளில் கீழ்கண்டவருள் எவர் அந்த சத்தியாகிரகத்தில் கலந்து கொள்ளவில்லை?

(A) குஞ்ஞப்பி (B) பாஹிலேயன்
(C) கோவிந்தபனிக்கர் (D) கே.பி. கேசவ மேனன்

**7.** "கேத்ரி காப்பர்" இதன் மூலப்பொருள் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

(A) ஆந்திர பிரதேசம் (B) ஜார்க்கண்ட்
(C) பீஹார் (D) ராஜஸ்தான்

8. 63-வது தேசிய திரைப்பட விழாவில் எந்த மாநிலத்திற்கு திரைப்படத்திற்கான நட்பு மாநிலமாக பரிசு கிடைத்தது?

(A) குஜராத்
(B) கேரளா
(C) உத்திர பிரதேசம்
(D) தமிழ்நாடு

9. 2015-ம் ஆண்டிற்கான தேசிய சாகித்திய அகாதமி விருது பெற்ற கே.ஆர். மீராவின் புதினம் எது?

(A) ஆராசர்
(B) மனுஷ்யனு ஒரு ஆமுஹம்
(C) தலைமுறைகள்
(D) ஓரோதா

10. சிவாஜியின் ஆட்சிமுறையில் (அஷ்ட பிரதான்) எனப்படும் பிரதம மந்திரியை இப்படி அழைப்பர் :

(A) பேஷ்வா
(B) சுமந்த்
(C) அமாத்தியன்
(D) சச்சீவ்

11. “கிராமின செண்டக்காரன்” – இது இவருடைய ஓவியமாகும் :

(A) அம்ருத ஷேர்கில்
(B) அபனின்ரநாத் தாகூர்
(C) நந்தலால் போஸ்
(D) ராஜா ரவிவர்மா

12. “ஹித்கர்னி சபை” இதனை தோற்றுவித்தவர் யார்?

(A) அன்னிபெசன்ட்
(B) வீரேசலிங்கம்
(C) சுவாமி தயானந்தா
(D) ஜோதிராவ் புலே

13. “இரத்தத்திலும் நிறத்திலும் இந்தியனாகவும் ஆனால் ருசியிலும், அபிப்ராயத்திலும், நீதி மற்றும் புத்திசாலிதனத்தில் ஆங்கிலேயராகவும் ஒரு கூட்டத்தை அமைப்பதே நமது குறிக்கோள் ஆகும்”. யாருடைய கூற்று இது?

(A) கர்சன் பிரபு
(B) வாரன் ஹேஸ்டிங்ஸ்
(C) வில்லியம் பென்டிக் பிரபு
(D) மெக்காலே பிரபு

14. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான தாஷ்கண்ட் ஒப்பந்தம் எந்த வருடம் நடைபெற்றது?

(A) 1972
(B) 1948
(C) 1969
(D) 1966

15. “அங் சான் சுகி” இவர் தொடர்புடைய அரசியல் கட்சி :

(A) மக்களாட்சிக்கான தேசிய லீக்
(B) டெமாக்ரடிக் ரிபப்ளிக்
(C) ரிபப்ளிக் ஆப் மியான்மர்
(D) தேசிய லீக்

16. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழுமத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடு எது?

(A) சீனா
(B) இத்தாலி
(C) இஸ்ரேல்
(D) ஜப்பான்

17. கேரளாவில் எந்த நீர் மின்சக்தி நிலையம் முதன்முதலில் தனியாரால் நிர்வகிக்கப்படுகிறது?

(A) காக்கட்
(B) மணியார்
(C) குட்டியாடி
(D) இடுக்கி

18. மிக முக்கியமான ஒரு பொது பிரச்சனையில் மக்களின் முடிவை தெரிவிக்க பயன்படும் ஒரு முறை :

(A) பொது இசைவு
(B) தேர்தல்
(C) அபிக்கிரமம்
(D) திரும்ப அழைத்தல்

19. ஐந்தாண்டு திட்டங்களுக்கான ஒப்புதல் யார் வழங்குவார்?

(A) பாராளுமன்றம்
(B) திட்டக் குழு
(C) குடியரசுத் தலைவர்
(D) தேசிய வளர்ச்சிக் குழுமம்

20. ஆயுள் காப்பீட்டுத் துறையின் தனியார்மயமாக்கல் சம்பந்தப்பட்ட ஒரு குழு :

(A) லகடாவாலா குழு
(B) குமாரப்பா குழு
(C) மல்ஹோத்ரா குழு
(D) ராஜா செல்லையா குழு

21. திருவனந்தபுரத்தில் உள்ள வர்க்கலா மாவட்டத்தில் கிடைக்கும் கனிமத்தின் சேகரிப்பு :

(A) லிக்னைட்
(B) பாக்சைட்
(C) சுண்ணாம்புக்கல்
(D) படிக மண்

22. இந்தியாவும்-நேபாளும் இணைந்து செயல்படுத்தும் திட்டம் :

(A) துங்கபத்ரா நதி பள்ளத்தாக்கு திட்டம்
(B) கோசித் திட்டம்
(C) தாமோதர் நதி பள்ளத்தாக்கு திட்டம்
(D) இந்திராகாந்தி கால்வாய் திட்டம்

23. வாக்களிக்கும் உரிமை உள்ளவர்களின் பருவ முதிர்ச்சியின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்ட முதல் மாநிலம் :

(A) மணிப்பூர் (B) ஹைதராபாத்
(C) காஷ்மீர் (D) ஜுனாகத்

24. இந்தியாவின் புகழ்மிக்க வியாபாரிகளால் ஏற்படுத்தப்பட்ட ஓர் திட்டம் :

(A) பிர்லா திட்டம் (B) மக்கள் திட்டம்
(C) காந்தியன் திட்டம் (D) பாம்பே திட்டம்

25. கேரளாவின் மக்கள்தொகை அடர்த்தி :

(A) 382 (B) 860
(C) 819 (D) 840

26. IFC-கோட் எண்ணில் எவ்வளவு இலக்கங்கள் உள்ளன?

(A) 10 (B) 12
(C) 11 (D) 9

27. கேரள மந்திரி சபையினுடைய ஆங்கில இந்திய உறுப்பினர் :

(A) ஜான் பெர்னான்டஸ் (B) சைமன் பிரிட்டோ
(C) மேத்யூ டி. தாமஸ் (D) தாமஸ் ஐசக்

28. மட்டான்சேரி யூதர்கள் வழிபாட்டுத் தலம் கட்டப்பட்ட வருடம் :

(A) 1658 (B) 1745
(C) 1568 (D) 1468

29. தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்காக மக்களவையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் சீட்டுகளை ஒதுக்க வழிவகுக்கும் சட்டம் :

(A) 243 (B) 330
(C) 332 (D) 46

30. தேசிய மனித உரிமைகள் குழுவின் தலைவர் யார்?

(A) எஸ். ஆனந்த் (B) கே.ஜி. பாலகிருஷ்ணன்
(C) ராஜேந்திர பாபு (D) எச்.எல். தத்து

31. விண்வெளியில் அமைந்துள்ள இந்தியாவின் முதல் விண்வெளி வானாய்வுக் கூடம் எது?
(A) அஸ்ட்ரோ சாட்
(B) எஜூ சாட்
(C) காஸ்மோ சாட்
(D) ஜி-சாட் 15

32. 'ஓர் குளத்தின் அடியிலிருந்து தோன்றும் காற்றுக் குமிழ்களின் அளவானது, கீழிருந்து மேலே உயர உயர அளவில் பெரிதாகும்' – இந்த வாயு விதி எதனுடன் சம்பந்தப்பட்டது?
(A) சார்லஸ் விதி
(B) ஜூல்ஸ் விதி
(C) அவகாட்ரோ விதி
(D) பாய்லெஸ் விதி

33. வானத்தின் நீல நிறம் எந்த இயற்கை நிகழ்வால் ஏற்படுகிறது?
(A) ஒளியின் கோணல்
(B) ஒளி எதிர்த்தல்
(C) ஒளிப்போக்கு
(D) ஒளி விலகல்

34. 300 K வெப்பத்தில் வைக்கப்பட்டுள்ள 1 கிலோ தண்ணீர் மற்றும் 1 கிலோ தேங்காய் எண்ணெய் இவற்றை 4200 J அளவுக்கு சூடு சக்தி ஏற்றினால் அவைகளின் புதிய வெப்பம் எவ்வளவாக இருக்கும்?
(A) தண்ணீர் 301 K, தேங்காய் எண்ணெய் 301 K
(B) தண்ணீர் 302 K, தேங்காய் எண்ணெய் 302 K
(C) தண்ணீர் 301 K, தேங்காய் எண்ணெய் 302 K
(D) தண்ணீர் 302 K, தேங்காய் எண்ணெய் 301 K

35. காற்று, இரும்பு, தண்ணீர் இவைகளின் திசைவேகத்தை ஏறுவரிசையில் எழுது :
(A) காற்று, தண்ணீர், இரும்பு
(B) காற்று, இரும்பு, தண்ணீர்
(C) தண்ணீர், காற்று, இரும்பு
(D) இரும்பு, காற்று, தண்ணீர்

36. கீழ்கண்ட தனிமங்களில் எது ஓரகத் தனிமம் ஆகும்?
$^{16}_{8}W$, $^{12}_{6}X$, $^{14}_{7}Y$, $^{14}_{6}Z$
(A) $^{16}_{8}W$, $^{12}_{6}X$
(B) $^{16}_{8}W$, $^{14}_{7}Y$
(C) $^{14}_{7}Y$, $^{14}_{6}Z$
(D) $^{12}_{6}X$, $^{14}_{6}Z$

37. குளுகோஸ் $[C_6H_{12}O_6]$ -ன் மூன்று மூலக்கூறுகளில் எவ்வளவு அணுக்கள் உள்ளன?
(A) 72
(B) 135
(C) 27
(D) 540

38. கீழ்கண்டவற்றுள் எது மீத்தேனுடன் சம்பந்தம் இல்லாதது?
(A) பயோ எரிவாயுவின் முக்கிய உட்பொருள்
(B) எல்.பி.ஜி.-யின் முக்கிய உட்பொருள்
(C) மார்ஷ் வாயு எனப்படுவது
(D) இயற்கை வாயுவின் முக்கிய உட்பொருள்

39. ஒரு அணுவின் N-ஷெல்லில் இருக்கும் மின்னணுவின் இயல் எண் என்ன?
(A) 8
(B) 16
(C) 32
(D) 24

40. வியாபாரத்திற்காக உற்பத்தி செய்யப்படும் வழிமுறையில் எந்த முறையில் அமோனியா தயாரிக்கப்படுகிறது?
(A) காண்டாக்ட் முறை
(B) ஹேபர் முறை
(C) ஹால் ஹெர்ரோல்ட் முறை
(D) பையர் முறை

**41.** மனிதனின் எலும்புக்கூட்டில் உள்ள மொத்த எலும்புகளின் எண்ணிக்கை :

(A) 70
(B) 206
(C) 100
(D) 80

**42.** கேரளாவின் எந்த மாவட்டத்தில் காடுகள் கிடையாது?

(A) கோட்டயம்
(B) ஆலப்பி
(C) மலப்புரம்
(D) எர்ணாக்குளம்

**43.** சுய பாதுகாப்பு குறைபாட்டிற்கான ஒரு உதாரணம் :

(A) கீல்வாதம்
(B) சுவாசகாசம்
(C) அலர்ஜி
(D) டெட்டானி

**44.** கேரள அரிசி ஆய்வுக்கூடம் அமைந்துள்ள இடம் :

(A) கோட்டயம்
(B) பன்னியூர்
(C) பட்டம்பி
(D) காசர்கோடு

**45.** "கோய்ட்ர்" காரணமாக பாதிக்கப்படும் ஓர் சுரப்பி :

(A) பிட்யூட்டரி சுரப்பிகள்
(B) தைராய்டு சுரப்பிகள்
(C) தைமஸ் சுரப்பி
(D) கணையம்

**46.** கேரள அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட ஓர் திட்டம் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நோய்களுக்கான சிகிச்சை பெறும் திட்டம் :

(A) அக்ஷயா
(B) ஆரோக்ய கிரண்
(C) சுஹ்ருதம்
(D) காருண்யா

**47.** காடுகள் அழிப்பு மற்றும் தொழிற்சாலைமயமாக்கல் போன்ற காரணங்களால் கார்பன்-டை-ஆக்சைட்டின் கூடுதலால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு :

(A) க்ளோபல் வார்மிங்
(B) சீதோஷ்ண நிலை மாற்றம்
(C) தண்ணீர் பற்றாக்குறை
(D) விவசாய நஷ்டம்

**48.** 'ஆன்கோலாஜி' என்பது எந்த நோய் தொடர்புடைய சிகிச்சை ஆகும்?

(A) போலியோ
(B) டி.பி. (ட்யூபர்குளோசிஸ்)
(C) கேன்சர்
(D) டெட்டனஸ்

**49.** விட்டமின்-D குறைபாட்டால் ஏற்படும் நோய் :

(A) சிரோப்தால்மியா
(B) மாராஸ்மஸ்
(C) கணா
(D) கௌஷியார்டெர்

**50.** 'மலேரியா' கீழ்கண்ட எவற்றால் ஏற்படுகிறது?

(A) ப்ளாஸ்மோடியம்
(B) வைரஸ்
(C) ஃபங்கஸ்
(D) பாக்டீரியா

51. ஓர் எண்கணித தொடரின் முதல் 10 தொடர்ச்சியான எண்களின் கூட்டுத்தொகை 340 மற்றும் முதல் 5 தொடர் எண்களின் கூட்டுத்தொகை 95 என்றால் அத்தொடரின் முதல் எண் என்ன?

(A) 34
(B) 17
(C) 7
(D) 10

52. $(0.008)^{-30} =$

(A) $8^3$
(B) $3^8$
(C) $5^{-90}$
(D) $5^{90}$


53. ராமுவின் வயது அவன் தந்தையின் வயது போல 1/6 மடங்கு ஆகும். ராமு, அவன் தந்தை மற்றும் தாயின் தற்போதைய வயதின் கூட்டுத் தொகை 70. ராமுவின் தந்தையின் வயது ராமுவின் வயதைப் போல் இரு மடங்கானால், அவர்கள் அனைவரின் வயதுகளின் கூட்டுத்தொகையும் தற்போதைய வயதின் கூட்டுத் தொகையின் இரு மடங்காகும் என்றால் ராமுவின் தந்தையுடைய தற்போதைய வயது என்ன?

(A) 30
(B) 35
(C) 70
(D) 40

54. $\sqrt{4\frac{25}{36}} =$

(A) $2\frac{5}{6}$
(B) $\frac{5}{6}$
(C) $2\frac{1}{6}$
(D) $\frac{35}{6}$

55. கீழ் கொடுத்துள்ள வரைபடத்தில் $AB$ மற்றும் $CD$ இணை கோடுகளாகும். $APB$ என்ற முக்கோணம் மற்றும் $PCD$ என்ற முக்கோணங்களின் பரப்பளவு முறையே 9 cm² மற்றும் 4 cm² என்றால் மொத்த வரைபடத்தின் பரப்பளவு என்ன?




(A) 25 cm²
(B) 13 cm²
(C) 36 cm²
(D) 5 cm²

56. மூன்று கார்களுடைய வேகத்தின் விகிதம் 3 : 4 : 5 என்று கொடுக்கப்பட்டால், அந்த கார்கள் ஓர் குறிப்பிட்ட தூரத்தை சென்றடைய ஆகும் நேரத்தின் விகிதம் :

(A) 6 : 8 : 10
(B) 20 : 15 : 12
(C) 12 : 20 : 15
(D) 30 : 20 : 12

57. 30 cm ஆரம் கொண்ட ஓர் கோளத்தை உருக்கினால் அதில் 5 cm ஆரம் கொண்ட எத்தனை கோளங்களை கிடைக்கப் பெறலாம்?

(A) 216
(B) 27
(C) 8
(D) 10

58. $\frac{1}{5} = \frac{1}{7} + \frac{1}{42} +$ ________

(A) $\frac{1}{15}$
(B) $\frac{1}{30}$
(C) $\frac{1}{45}$
(D) $\frac{1}{20}$

59. ஒருவன் ஒரு பொருளை 10% தள்ளுபடியில் வாங்கி பிறகு வாங்கிய விலையில் 20% கூட்டி விற்பனை செய்தால், கிடைக்கப்பெறும் லாப சதவிகிதம் என்ன?

(A) 10%
(B) 8%
(C) 20%
(D) 5%

60. $\frac{(0.512)^{1/3} + (0.008)^{1/3}}{(0.512)^{1/3} - (0.008)^{1/3}} =$

(A) 1
(B) $\frac{5}{3}$
(C) $\frac{10}{3}$
(D) $\frac{5}{6}$

61. இவற்றுள் வித்தியாசமான ஒன்றை கண்டுபிடி :

10, 30, 130, 340

(A) 30
(B) 10
(C) 340
(D) 130

62. "YELLOW" என்பதை "BVOOLD" என்றும் 'RED' என்பதை 'IVW' என்றும் எழுதினால் "BLACK" என்பதை எவ்வாறு எழுதலாம்?

(A) YZOP (B) YOZP
(C) ZOYP (D) YOPZ

63. 1200, 480, 192, ————

(A) 76.8 (B) 78.6
(C) 76.84 (D) 70.6

64. ஒரு மனிதன் ஒரு பெண்மணியை சுட்டிக்காட்டி "அவருடைய அப்பாவின் மகள் என் அப்பாவின் மனைவியின் தங்கை" என்று கூறுகிறான் என்றால் அந்த மனிதனுக்கும் பெண்மணிக்கும் உள்ள சொந்தம் என்ன?

(A) அம்மா (B) அத்தை
(C) தங்கை (D) சொந்தத்தை கண்டுபிடிக்க இயலாது

65. 26 ஜனவரி 2013 சனிக்கிழமை என்றால் அதே வருடம் ஆகஸ்ட் 15 எந்த கிழமையில் வரும்?

(A) வெள்ளிக்கிழமை (B) சனிக்கிழமை
(C) செவ்வாய் கிழமை (D) ஞாயிற்றுக்கிழமை

66. 0, 6, 24, 60, 120, ________, 336. விடுபட்ட எண் எது?

(A) 240 (B) 210
(C) 220 (D) 280

67. '$a$' என்பது '+', '$b$' என்பது '–', '$c$' என்பது '×' மற்றும் '$d$' என்பது '÷' என குறிக்கப்பட்டால் $80dc5a4$–6 இதன் மதிப்பு என்ன?

(A) 84 (B) 48
(C) 40 (D) 0

68. *A, B, C, D, E* மற்றும் *F* ஒரு வட்டத்தில் நிற்கிறார்கள். '*B*' என்பவர் '*F*'-க்கும் '*C*'-க்கும் நடுவில், '*A*' என்பவர் '*E*'-க்கும் '*D*'-க்கும் நடுவில் நிற்கிறார், '*F*' என்பவர் '*D*'-க்கு இடதுபுறம் உள்ளார் என்றால் '*A*'-க்கும் '*F*'-க்கும் இடையில் நிற்பவர் யார்?

(A) *A* (B) *B*
(C) *C* (D) *D*

69. FISH = 66, SEA = 56, BOAT =

(A) 73 (B) 70
(C) 35 (D) 37

70. '*A*' என்பவர் *D*-யின் அம்மா, '*C*' என்பவர் '*B*'-யின் மகள். '*F*' என்பவர் '*C*'-யின் கணவர். '*G*' என்பவர் '*A*'-யின் கணவர் மற்றும் '*B*' என்பவர் '*A*'-யின் தங்கை என்றால் '*G*'-க்கும் '*D*'-க்கும் உள்ள சொந்தம் என்ன?

(A) அப்பா (B) கணவர்
(C) மாமா (D) மகன்

71. 'Shut the door' is a/an ———— sentence.

(A) exclamatory
(B) assertive
(C) imperative
(D) interrogative

72. The doctor prescribed an ointment. The patient ———— it according to instruction.

(A) administrated
(B) advised
(C) applied
(D) instructed

73. Arun's father's eldest brother is his favourite :

(A) uncle
(B) parent
(C) cousin
(D) aunt

74. 'Can you lend me a pen, please'?

(A) Yes, here you are!
(B) Yes, here you!
(C) Yes, you can.
(D) Yes, here.

75. The speaker drew the attention of the audience ———— the burning issues.

(A) into
(B) towards
(C) from
(D) to

76. One who talks in sleep is :

(A) somnambulist
(B) garrulous
(C) credulous
(D) somniloquent

77. The train started after we ———— for about an hour.

(A) had played
(B) have been played
(C) were playing
(D) have been playing

78. He would not have failed if he ———— enough money.

(A) would have
(B) had had
(C) would have had
(D) was having

79. A government controlled by the rich :

(A) oligarchy
(B) aristocracy
(C) plutocracy
(D) democracy

80. Write the correct meaning of the idiomatic expression 'a big bug' :

(A) monster
(B) a villain
(C) a saint
(D) a person of importance

81. The correctly spelt word below is :

(A) discrimination (B) descrimination

(C) descremination (D) discremenation

82. The opposite of 'innocent' is :

(A) guilty (B) poor

(C) rough (D) proud

83. The rider ―――――――― his horse to victory.

(A) road (B) rode

(C) rod (D) rid

84. One of the men ―――――――― reached the top of the mountain.

(A) has (B) are

(C) were (D) have

85. She has finished her work, :

(A) hasn't she? (B) has she?

(C) isn't she? (D) is she?

86. He ordered his servant :

(A) that he go home (B) to go home

(C) that go home (D) that he should go home

87. The leaves ―――――――― as the wind blew.

(A) rustled (B) hissed

(C) murmured (D) crackled

88. A bird in hand is worth two in the :

(A) forest (B) nest

(C) cave (D) bush

89. The marriage party ―――――――― at dawn.

(A) put off (B) set off

(C) set on (D) set up

90. The president was specially happy to visit the school because it was his :

(A) sine die (B) alma mater

(C) bonafide (D) prima facie

**91.** இடப்பெயரைக் குறிக்கும் சொல் :

(A) நாள் (B) ஊர்

(C) மனிதன் (D) மரம்

**92.** பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் பகுபத உறுப்பு :

(A) சாரியை (B) விகுதி

(C) விகாரம் (D) சந்தி

**93.** ஆடுகள் மேய்ந்தது – இவ்வாக்கியத்தின் சரியான வடிவம் :

(A) ஆடுகள் மேய்ந்தன (B) ஆடு மேய்ந்தன

(C) ஆடுகள் மேய்கின்றது (D) ஆடு மேய்கின்றன

**94.** மான்குட்டி என்பதன் மரபுச்சொல் :

(A) மான்குருளை (B) மான்பறழ்

(C) மான்கன்று (D) மான்பிள்ளை

**95.** பரிதி என்பதன் பொருள் :

(A) சந்திரன் (B) சூரியன்

(C) உலகம் (D) கவிஞன்

**96.** என்மக ஜே நாவலின் ஆசிரியர் :

(A) எம்.டி. வாசுதேவன் நாயர் (B) சாரா ஜோஸப்

(C) அம்பிகாசுதன் மாங்காடு (D) இ.ஜே. பிலிப்

**97.** காக்கநாடன் என்ற புனைப்பெயர் கொண்டவர் :

(A) கேசவன்நாயர் (B) ஜார்ஜ் வர்கீஸ்

(C) இ.ஜே. பிலிப் (D) அப்புக்குட்டன் நாயர்

**98.** ஜி. சங்கரக்குறுப்பின் ஞானபீடப் பரிசு பெற்ற படைப்பு :

(A) ஜீவனசங்கீதம் (B) விஷ்வதர்சனம்

(C) சூர்யகாந்தி (D) ஓடக்குழல்

**99.** Video Cassette என்பதன் தமிழாக்கம் :

(A) ஒளிப்பேழை (B) ஒலிப்பேழை

(C) ஒலிப்பெட்டி (D) ஒளிவாங்கி

**100.** Writing essay is an art – இத்தொடரின் தமிழ் மொழிபெயர்ப்பு :

(A) கட்டுரை எழுதுவது ஒரு கலை (B) கட்டுரை எழுதுவது பாராட்டுதற்குரியது

(C) கலைகளில் சிறந்தது கட்டுரை எழுதுவது (D) கட்டுரை எழுதுவது கடினமானது

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK